# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **144/நகராட்சி/2018**

நாள் : **10/09/2018**

**திரு M. மாதேஸ்வரன்,**
**மேட்டூர் அணை,** – **முறையீட்டு மனுதாரர்**
**சேலம் மாவட்டம்.**

**நகராட்சி ஆணையர்,**
**கடலூர் நகராட்சி,**
**கடலூர்.** – **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, கூலி லைன், எண்.47, J- பிளாக் என்ற முகவரியில் வசிக்கும் திரு M. மாதேஸ்வரன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட 17.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 144/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, கூலி லைன், எண்.47, J- பிளாக் என்ற முகவரியில் வசிக்கும் திரு M. மாதேஸ்வரன் என்பவர், பொள்ளாச்சி மற்றும் தாராபுரம் நகராட்சிகளில் முறையே இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளராகப் பணியாற்றிய காலங்களில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, அத்தொகையினை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். பொள்ளாச்சி நகராட்சியில் 15.12.1981 முதல் 11.01.1983 முடிய இளநிலை உதவியாளராகவும் தாராபுரம் நகராட்சியில் 09.01.1991 முதல் 30.09.1991 முடிய உதவியாளராகவும் பணியாற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/L3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்–3/2008–இல் ஒய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின்போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். மேலும், செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரும் தன்து 07.06.2018 நாளிட்ட கடிதம் எண்.1526/2018/அ 1–இல், இதுபோன்ற நேர்வில் மனுதாரர் முறைமன்ற நடுவத்தினை நாடாமல் இருக்கும் வகையில் உரிய நேரத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடலூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் கடலூர் நகராட்சியில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார் என அறிய முடிகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணி விவரங்களை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களிடம் உறுதி செய்வதுடன், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி ஆணையிடப்படுகிறது.

**2018**–ஆம் ஆண்டு, **செப்டம்பர்** திங்கள், **10**–ஆம் நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு எம். மாதேஸ்வரன்,
   J- பிளாக் எண்.47, கூலி லைன்,
   மேட்டூர் அணை,
   சேலம் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   கடலூர் நகராட்சி,
   கடலூர்.

3. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாச்சி நகராட்சி,
   பொள்ளாச்சி.

4. நகராட்சி ஆணையர்,
   தாராபுரம் நகராட்சி,
   தாராபுரம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி